செய்தி வெளியீடு எண்: 989 நாள்:22.12.2020

<u>செய்தி வெளியீடு</u>

மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் நிலப்பயன்பாட்டு குழுமத்தின் கீழ் அச்சிடப்பட்ட 1) **'மூலிகை மருத்துவக் கையேடு'**, 2) **'அன்றாட வாழ்வில் மூலிகைகளின் பங்கு'** மற்றும் 3) **'நீடித்த நிலையான வகையில் கனிம வளம் அகற்றல் சுரங்கம் மற்றும் அவற்றினை உள்ளடக்கிய வளர்ச்சி தொடர்பான சட்டம் பற்றிய கண்ணோட்டம்'** போன்ற புத்தகங்களின் புத்தக வெளியீட்டு விழா 22.12.2020 அன்று முற்பகல் 10.30 மணியளவில் சென்னை எழிலகத்தில் அமைந்துள்ள மனிதவள மேம்பாட்டு காணொலி கூட்டரங்கில் நடத்தப்பட்டது.

**நிலையான மற்றும் வளர்ச்சி உள்ளடக்கிய கனிமவளம் தொடர்பான சட்டம்** பற்றிய ஆய்வு புத்தகத்தின் முதல் பதிப்பினை மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் **மாண்புமிகு துணைத் தலைவர் திரு.சி.பொன்னையன்** அவர்கள் வெளியிட வேலூர் மாவட்டம், திருவள்ளுவர் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர்,

**முனைவர். தாமரைச்செல்வி சோமசுந்தரம்,** அவர்கள் பெற்றுக்கொண்டார்.

**“மூலிகை மருத்துவக் கையேட்டின்”** முதல் புத்தக பதிப்பினை மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் உறுப்பினர் செயலர், **திரு. அனில் மேஷ்ராம், இ.ஆ.ப.,** அவர்கள் வெளியிட தமிழ்நாடு அரசு சித்த மருத்துவக் கல்லூரியின் முன்னாள் துணை முதல்வர், **முனைவர். பி. ஜெயபிரகாஷ் நாராயணன்,** அவர்கள் பெற்றுக்கொண்டார்.

**“மூலிகை தாவரங்கள்”** பற்றிய புத்தகத்தின் முதல் பதிப்பினை மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் **மாண்புமிகு துணைத் தலைவர் திரு.சி.பொன்னையன்** அவர்கள் வெளியிட தமிழ்நாடு அம்பேத்கர் பல்கலைக்கழகத்தின் உதவி பேராசிரியர், **முனைவர். எஸ். ஏழுமலை,** அவர்கள் பெற்றுக்கொண்டார்.

**கையேடுகள் பற்றிய குறிப்பு பின்வருமாறு :**

**மூலிகை மருத்துவக் கையேடு**

**“மூலிகை மருத்துவம் கையேடு”** புத்தகத்தின் உள்ளீடுகளை மதுரை மூலிகை மருத்துவர் **திரு.வி. நம்மாழ்வார்** அவர்கள் வழங்கியுள்ளார். இப்புத்தகமானது எந்தவொரு பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாமல் இயற்கையாகவே நோய்களை குணப்படுத்தக்கூடிய

மருத்துவ குணங்களைக் கொண்ட இயற்கை மூலிகைகள் மற்றும் பழங்கள் எவ்வாறு உதவுகின்றன என்பதை விளக்குகின்றது. கொரோனா நோய் கிருமியிலிருந்து சமூகத்தைப் பாதுகாக்க இயற்கை மூலிகைகள் எவ்வாறு ஒரு தீர்வாக செயல்படுகின்றன என்பதை மக்களிடம் உணர்த்திடும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இப்புத்தகத்தின் முக்கிய நோக்கமாகும்.

**அன்றாட வாழ்வில் மூலிகைகளின் பங்கு**

அன்றாட வாழ்வில் மூலிகைகளின் பங்கு என்ற தலைப்பின் கருத்தரங்கானது தமிழ்நாடு மாநில நிலப்பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியத்தால் **28.11.2019** அன்று மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு (முன்னர் மாநில திட்டக்குழு)–வின் மனித மேம்பாட்டு காணொலி கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் நம் அன்றாட வாழ்வில் பயன்படுத்தக்கூடிய மருத்துவ குணமிக்க மூலிகைகள் பற்றி எடுத்துரைக்கப்பட்டது. மேலும், இக்கருத்தரங்கில் மருத்துவ குணமிக்க மூலிகைகளை உட்கொள்ளும் முறைகள், சூரியக் குளியல் பற்றிய முக்கியத்துவம், பூக்கள் மற்றும் பழங்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் நறுமண சிகிச்சை முறை போன்றவைகள் விளக்கப்பட்டது.

**நிலையான மற்றும் வளர்ச்சி உள்ளடக்கிய சுரங்கம் தொடர்பான சட்டம் பற்றிய ஆய்வு**

இப்புத்தகத்தின் ஆசிரியர் முனைவர். எஸ். ஏழுமலை, உதவி பேராசிரியர், தமிழ்நாடு அம்பேத்கர் பல்கலைக்கழகம், இணை ஆசிரியர் முனைவர். பு.செ. அர்ச்சனா கல்யாணி, இ.வ.ப., குழுமத்தலைவர் (நிலப் பயன்பாடு) மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு, சென்னை. தமிழ்நாட்டில் கிடைக்கும் கனிம வளம் – பெரிய, சிறிய எரிபொருள் மற்றும் அணு என நான்கு வகை தாதுக்களாக வரையறுக்கப்பட்டுள்ளது. சுண்ணாம்பு, மேக்னசைட், கிரானைட்டுகள், களிமண், பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு, மோனாசைட், ரூட்டைல் மற்றும் இல்மனைட் பட்டியலிடப்பட்டுள்ளது.

இப்புத்தகம் 1952 முதல் இந்தியாவின் கனிமத் துறையின் சட்டங்கள் வரலாறு மற்றும் 2019–ஆம் ஆண்டின் புதிய தேசிய கனிமக் கொள்கை மற்றும் அவற்றின் திருத்தம் போன்றவற்றையும் மாவட்ட கனிம அறக்கட்டளையின் கீழ் வகுக்கப்பட்ட திட்டங்கள் எவ்வாறு நீடித்த வளர்ச்சி இலக்குகள் (SDG) எட்ட உதவுகிறது என்பது பற்றியும் விளக்குகிறது. உள்ளூர் மக்கள் மற்றும் பழங்குடியினர், வனவாசிகள், ஆதிதிராவிடர் / பட்டியல் பழங்குடியினர் போன்ற அனைவரையும்

உள்ளடக்கிய வளர்ச்சி என்ற கருத்தினை அடிப்படையாகக் கொண்டு இப்புத்தகம் வடிவமைக்கப்பட்டது.

மேலும், சுரங்கங்கள் மற்றும் கனிமத் துறையின் செயல்திறன் குறித்து தேவையான முடிவுகளையும் பொருத்தமான பரிந்துரைகளையும் கொண்டுவர இப்புத்தகம் உறுதுணையாக இருக்கிறது.

உறுப்பினர் செயலர்
மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**